# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதி விசேஷமானது

අංක 2026/27 - 2017 ජූලි මස 05 වැනි බදාදා - 2017.07.05

***2026/27 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆந் திகதி புதன்கிழமை***

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 6/2001*

**2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டம்**

*2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டத்தின் 89 ஆ மற்றும் 89இ (1) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட்ட 105 ஆம் பிரிவின் கீழ் இலங்கைக் காப்புறுதிச் சபையினால் ஆக்கப்பட்ட விதிகள்.*

*தவிசாளர்,*
*இலங்கைக் காப்புறுதிச் சபை.*

கொழும்பு
*2017, யூலை 05 .*

**விதிகள்**

1. இவ்விதிகள் 2017 ஆம் ஆண்டின் நட்டம் சீராக்குநர் பதிவு விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) ஆளெவரும், அத்தனியாள் பின்வருமாறு இருந்தாலொழிய, நட்டம் சீராக்குநராகப் பதிவு செய்யப்படுவதற்கு விண்ணப்பித்தாலோ, அல்லது நட்டம் சீராக்குநராகத் தொடர்ந்து செயலாற்றுதலோ அல்லது காட்டி நிற்றலோ ஆகாது :-

(அ) பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவராக இருந்தாலொழியவும் ;

(ஆ) இலங்கையில் வதிபவராக இருந்தாலொழியவும் ;

(இ) பின்வரும் தகைமையைக் கொண்டிருந்தாலொழியவும் :-

(i) ஐக்கிய இராச்சியத்தின் பட்டயம் பெற்ற நட்டம் சீராக்குநர்கள் நிறுவகத்தின் இணையுறுப்பினராக இருந்தாலொழிய ;

(ii) அவுஸ்திரேலியாவின் பட்டயம் பெற்ற நட்டம் சீராக்குநர்கள் நிறுவகத்தின் இணையுறுப்பினராக இருந்தாலொழிய ;

(iii) ஐக்கிய இராச்சியத்தின் பட்டயம் பெற்ற காப்புறுதி நிறுவகத்தின் இணையுறுப்பினராக இருந்தாலொழிய ;

(iv) இந்தியாவின் காப்புறுதி நிறுவகத்தின் இணையுறுப்பினராக இருந்தாலொழிய ; அல்லது



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(v) சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வேறெவையேனும் தகைமைகளைக் கொண்டிருந்தாலொழிய ; அல்லது

(vi) காப்புறுதி உரிமைக் கோரிக்கைகளின் கீழான நட்டங்களை நுண்ணாய்வு செய்வதிலும் மதிப்பிடுவதிலும் குறைந்தபட்சம் பத்து ஆண்டுகாலத் தோதான அனுபவத்தையேனும் கொண்டிருந்தாலொழிய.

(ஈ) தகுதியானவரும் தகுந்தவருமாக இருந்தாலொழியவும் ;

(உ) காப்புறுதி உரிமைக்கோரிக்கைகளின் கீழான நட்டங்களை நுண்ணாய்வு செய்வதிலும் மதிப்பிடுவதிலும் இரண்டு ஆண்டு காலத் தோதான அனுபவத்தைக் கொண்டிருந்தாலொழியவும் ;

(ஊ) குறைந்தபட்சம் ஐந்து மில்லியன் ரூபாவான காப்புறுதிப்பத்திர வரையறையுடன் போதிய உயர் தொழில்சார் பொறுப்புக் காப்புறுதியினால் காப்பீடு செய்யப்பட்டிருந்தாலொழியவும் ; அத்துடன்

(எ) ஒரு காப்புறுதியாளரின், காப்புறுதி முகவரின் அல்லது தரகரின் பணிப்பாளராக, சிரேட்ட முகாமையாளராக, அலுவலராக, பங்குதாரராக அல்லது ஊழியராகவிராதிருந்தாலொழியவும்.

(2) நட்டம் சீராக்குநராகப் பதிவு செய்யப்படுவதற்கு விண்ணப்பிக்கின்ற எவரேனுமாள் இதற்கான அட்டவணை I இல் தரப்பட்டுள்ள படிவத்தில் விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

3. (1) கம்பனியெதுவும் பின்வருமாறு இருந்தாலொழிய, ஒரு நட்டம் சீராக்குநராகப் பதிவு செய்யப்படுவதற்கு விண்ணப்பித்தலோ, அல்லது நட்டம் சீராக்குநராகத் தொடர்ந்து செயலாற்றுதலோ அல்லது காட்டிநிற்றலோ ஆகாது :-

(அ) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் முறையாகப் பதிவு செய்யப்பட்டிருந்தாலொழியவும் ;

(ஆ) அதன் முக்கிய ஆளணியினராக, தேர்ச்சிகளினதும் அனுபத்தினதும் நியதிகளின் படி தகுதியானவர்களும் தகுந்தவர்களுமான ஆட்களைக் கொண்டிருந்தாலொழியவும் ;

(இ) குறைந்தபட்சம் பத்து மில்லியன் ரூபாவான காப்புறுதிப்பத்திர வரையறையுடன் உயர்தொழில்சார் பொறுப்புக் காப்புறுதியினால் காப்பீடு செய்யப்பட்டிருந்தாலொழியவும் ;

(ஈ) அத்தகைய கம்பனியினால் தொழிலுக்கமர்த்தப்பட்டிருக்கையில், அல்லது அதன் பணிப்பின் கீழ்பணிபுரிகையில், விதி 2 (அ), (ஆ), (இ), (ஈ) மற்றும் (எ) என்பதன் கீழ் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பபாடுகளைக் கொண்டுள்ள காப்புறுதி நட்டங்களை நுண்ணாய்வு செய்து மதிப்பிடும் பணிப்பாளர் சபையினதும் தனியாட்களினதும் பெரும்பான்மையோரைக் கொண்டிருந்தாலொழியவும் ;

(உ) ஒரு காப்புறுதியாளரின், காப்புறுதி முகவரின் அல்லது தரகரின் கொளிக்கம்பனியாக அல்லது இணைக்கம்பனியாக அல்லது துணை நிலைக்கம்பனியாக இராதிருந்தாலொழியவும் ; அத்துடன்

(ஊ) அக்கம்பனியின் பங்குதாரர், சிரேட்ட முகாமையாளர், அலுவலர் அல்லது பணிப்பாளர் எவரும், ஒரு காப்புறுதியாளரின், காப்புறுதி முகவரின் அல்லது தரகரின் பணிப்பாளராக, சிரேட்ட முகாமையாளராக, அலுவலராக, பங்குதாரராக அல்லது ஊழியராகவிராதிருக்கின்றாரெனக் குறிப்பாக வெளிப்படுத்தினாலொழியவும்.

(2) நட்டம் சீராக்குநராகப் பதிவு செய்யப்படுவதற்கு விண்ணப்பிக்கின்ற ஏதேனும் கம்பனி இதற்கான அட்டவணை II இல் தரப்பட்டுள்ள படிவத்தில் விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

4. பதிவுக்கட்டணம் பின்வருமாறு சபைக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

| **விண்ணப்பக்காரரின் வகுதி** | **தொகை (ரூபா)** |
|---|---|
| | **முதலாவது பஞ்சாங்க ஆண்டு** |
| தனியாள் | 25,000.00 |
| கம்பனி | 75,000.00 |

5. முதலாவது பஞ்சாங்க ஆண்டின் பின்னர், பதிவுக்கட்டணங்கள், பின்வருமாறு ஒவ்வோராண்டும் சனவரி மாதம் முடியுமுன்னர் சபைக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

| **விண்ணப்பக்காரரின் வகுதி** | **தொகை (ரூபா)** |
|---|---|
| தனியாள் | 15,000.00 |
| கம்பனி | 50,000.00 |

6. இவ்விதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியன்று நட்டம் சீராக்குநர்களாகச் செயலாற்றுகின்ற அல்லது காட்டி நிற்கின்ற எல்லா ஆட்களும் இவ்விதிகள் வெளியிடப்பட்டதிலிருந்து ஆறு மாதங்களினுள் பதிவுக்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

7. இவ்விதிகளில் -

"சட்டம்" என்பது, 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டம் என்று பொருளாகும்;

"சபை" என்பது, சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிச் சபை என்று பொருளாகும் ;

"கம்பெனி" என்பது, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கருத்துக்குட்பட்டவொரு கம்பெனி என்று பொருளாகும்;

"காப்புறுதியாளர்", "காப்புறுதி முகவர்" மற்றும் "தரகர்" என்பன, சட்டத்திலுள்ள அதே பொருள்களைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"நட்டம் சீராக்குநர்" என்பது, காப்புறுதி உரிமைக்கோரிக்கைகளிலிருந்து எழுகின்ற நட்டங்களை நுண்ணாய்வுசெய்து மதிப்பிடுவதில் விசேடித்த அறிவையுடையவரும் சட்டத்தின்கீழ் நட்டம் சீராக்குநராகப் பதிவுசெய்யப்பட்டவருமான ஆள் ஒருவர் என்று பொருளாகும்.

## அட்டவணை I

ஒரு நட்டம் சீராக்குநராகப் பதிவுசெய்யப்படுவதற்கான விண்ணப்பம்
(தனியாட்களுக்காக)

(2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித்தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பம்)

| | |
|---|---|
| குறிப்பீட்டு இல. | |
| பதிவுக்கட்டணம் - | |
| முதலாம் ஆண்டு | ரூபா |
| வருடாந்தக் கொடுப்பனவு | ரூபா |

பணிப்பாளர் தலைமையதிபதிக்கு,
இலங்கைக் காப்புறுதிச் சபை,
மட்டம் 11, கிழக்குக் கோபுரம்,
உலக வியாபார நிலையம்,
கொழும்பு 01.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் (வதிகின்ற/அதன் பிரசையாகவுள்ள) கீழே கையொப்பமிட்டுள்ள ................................... என்பவர் (விண்ணப்பகாரரின் முழுப்பெயர்) 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித்தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டத்தின் 89இ (1) ஆம் பிரிவின்கீழ் ஒரு நட்டம் சீராக்குநராகப் பதிவு செய்யப்படுவதற்காக விண்ணப்பத்துடன் இலங்கைக் காப்புறுதிச் சபையின் (இ.கா.ச.) மதிப்பீட்டக்காக இயைபான ஆதாரப்படுத்துகின்ற ஆவணங்களுடன் பின்வரும் தகவல்களையும் கொடுத்துதவுகின்றார்:

1. விண்ணப்பகாரரின் பெயர் : .......................................................

2. பதிவுசெய்யப்பட்ட முகவரி :
   (i) முகவரி : ......................................................................
   (ii) தொலைபேசி : ..................................................................
   (iii) தொலைநகல் : .................................................................
   (iv) மின்னஞ்சல் : ................................................................

3. தொழில் முகவரி : ......................................................................
   (i) முகவரி : ......................................................................
   (ii) தொலைபேசி : ..................................................................
   (iii) தொலைநகல் : .................................................................
   (iv) மின்னஞ்சல் : ................................................................

4. பிறந்த திகதி : ......................................................................
   (பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

5. தேசிய அடையாள அட்டை இல. /கடவுச்சீட்டு இல. : : .........................................................

6. கல்விசார் மற்றும் உயர்தொழில்சார் தகைமைகள், உறுப்பாண்மைகள் அத்துடன் அனுபவம் : ................................
   (பிரதிகளை இணைக்கவும்)

7. குறைந்தபட்சம் ஐந்து மில்லியன் ரூபாவான காப்புறுதிப்பத்திர வரையறையுடன் உயர்தொழில்சார் பொறுப்புக் காப்புறுதியை நீர் சமர்ப்பித்துள்ளீரா ? ................................
   இல்லையெனில், இப்படிவத்துடன் இணைக்கப்பட்ட தனிவேறான தாளில் விளக்கமொன்றைத் தரவும்.
   (பதிவுத்திகதியன்றும் அத்திகதியிலிருந்தும் பயனுறவேண்டிய உயர்தொழில்சார் பொறுப்புக் காப்புறுதிப்பத்திரங்களின் பிரதிகளை இணைக்கவும்.)

8. இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க முன்னரான மூன்றாண்டுக் காலப்பகுதியின்போது எந்நேரத்திலும் இ.கா.சபையின் சபையுறுப்பினராக அல்லது ஊழியராகச் சேவையாற்றியுள்ளீரா ? ................................

9. *ஒரு குற்றச்செயலுக்காக, இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டின் ஏதேனும் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டுள்ளீரா ? ................................

*ஆம் எனில், முழுவிபரங்களையும் வழங்குவதுடன், விண்ணப்பகாரர் தகுதியானவரும் தகுந்தவருமான ஆளொருவரென இகாச எவ்வாறாயினும் ஏன் முடிபு செய்யவேண்டுமென்பதையும் விளக்கவும் (இப்படிவத்துடன் இணைக்கப்பட்ட தனிவேறான தாளில்).

10. *இலங்கையின் அல்லது வேறேதேனும் நாட்டின் ஏதேனும் சட்டத்தின்கீழ் நீர் பொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்றவராக அல்லது வங்கிமுறிந்தவராக வெளிப்படுத்தப்பட்டுள்ளீரா ? ................................

11. *ஒரு தனிசின் மீள்கொடுப்பனவு அல்லது குடியியல் சேதவீடுகளின் கொடுப்பனவு தொடர்பாக, இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டின் ஏதேனும் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் தீர்ப்பை அல்லது கட்டளையைத் திருப்திப்படுத்துவதற்குத் தவறியுள்ளீரா? ................................

12. *இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டின் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினால் நீர் சித்தசுவாதீனமற்றவராக வெளிப்படுத்தப்பட்டுள்ளீரா? ................................

13. *இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே, ஏதேனும் காப்புறுதிக் கம்பனி, தரகர், காப்புறுதி முகவர், வங்கி, நிதிநிறுவனம் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழு என்பவற்றில் ஒரு பணிப்பாளராக, பிரதான நிறைவேற்று அலுவலராக அல்லது அதிகாரங்கொண்ட வேறேதேனும் பதவியில் சேவையாற்றுவதிலிருந்து ஓர் ஒழுங்குபடுத்தும் அல்லது வேறு அதிகாரசபையினால் அல்லது தகுதி வாய்ந்த நீதிமன்றமொன்றினால் நீர் தடுக்கப்பட்டுள்ளீரா, அகற்றப்பட்டுள்ளீரா அல்லது இடைநிறுத்தப்பட்டுள்ளீரா? ................................

14. (i) *தொழில் கொண்டு நடாத்துவதற்கு வழங்கப்பட்ட அதன் உரிமம் அல்லது வேறு அதிகாரம் இடைநிறுத்தப்பட்டுள்ள அல்லது இல்லாதாக்கப்பட்டுள்ள ; அல்லது ................................

(ii) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே ஒடுக்கப்பட்டுள்ள அல்லது ஒடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற அல்லது கட்டாயமாக ஒழித்துக்கட்டப்பட்டுள்ள அல்லது நிருவாகத்தினுள் இடப்பட்டுள்ள,

ஏதேனும் காப்புறுதிக் கம்பனியில், தரகரில், காப்புறுதி முகவரில், வங்கியில், நிதி நிறுவனத்தில் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவில் பணிப்பாளராக, பிரதான நிறைவேற்று அலுவலராக, பிரதான அலுவலராக அல்லது குறித்துரைக்கப்பட்ட அலுவலராக இருந்துள்ளீரா அல்லது அதிகாரங்கொண்ட வேறேதேனும் பதவியை வகித்துள்ளீரா?

15. காப்புறுதி உரிமைக்கோரிக்கைகள் மற்றும் தொடர்புபட்ட கருமங்களின் கீழ் நட்டங்களை நுண்ணாய்வு செய்து மதிப்பிடுவதிலான அனுபவம்.

| கம்பனியின் பெயர் | வகிக்கப்பட்ட பதவி | நிறைவேற்றப்பட்ட பணியின் சுருக்கமான விவரணம் | காலப்பகுதி |
|---|---|---|---|
| | | | |

(சான்றிதழ்களின் பிரதிகளை அல்லது வேறு சான்று, எவையேனுமிருப்பின், இணைக்கவும்)

16. நீர் ஒரு காப்புறுதியாளரின் பணிப்பாளரா, சிரேட்ட முகாமையாளரா, அலுவலரா, பங்குதாரரா அல்லது ஊழியரா அல்லது காப்புறுதி முகவரா அல்லது தரகரா? ................................

17. நீர் தகுதியானவரும் தகுந்தவருமான ஆளொருவரென்பதை மதிப்பிடுவதற்கென இகாச நியாயமான முறையில் அறிந்திருக்க வேண்டிய வேறெவையேனும் தகவல்களை, இப்படிவத்துடன் இணைக்கப்பட்ட தனிவேறான தாளில் வழங்கவும்.

18. சான்றுப்படுத்துகை :

எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை மேலே தரப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட தகவல்களும் ஆவணங்களும் பூரணமானவை, உண்மையானவை மற்றும் பிழை வழியுப்பணவல்ல என வெளிப்படுத்தி உறுதிப்படுத்துகின்றேன்.

விண்ணப்பகாரரின் கையொப்பம் : ................................

தேதி : ................................

*ஆம் எனில், முழுவிபரங்களையும் வழங்குவதுடன், விண்ணப்பகாரர் தகுதியானவரும் தகுந்தவருமான ஆளொருவரென இகாச எவ்வாறாயினும் ஏன் முடிபு செய்யவேண்டுமென்பதையும் விளக்கவும் (இப்படிவத்துடன் இணைக்கப்பட்ட தனிவேறான தாளில்).

**படிவத்தை நிரப்புவதற்கான அறிவுறுத்தல்கள் :**

(1) இவ்விண்ணப்பப்படிவம் நிரப்பப்படுமுன்னர், சட்டத்தின் ஏற்பாடுகளும் ....................... ஆந் தேதிய ............................. ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நட்டம் சீராக்குநர் பதிவு விதிகளும் விளங்கிக்கொள்ளப்பட்டுக் கவனமாக ஆராயப்படுவது முக்கியமானதாகும்.

(2) விண்ணபக்காரர்கள், தோதான எல்லா ஆதாரப்படுத்துகின்ற ஆவணங்களுடனும் சேர்த்து முறையாக நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவமொன்றை இ.கா.சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் கோரப்பட்ட எல்லாத் தகவல்களும் ஆவணங்களும் கொடுத்துதவப்படுதல் வேண்டும். பதியப்பட வேண்டிய விடயங்களெவையும் இல்லையாயின், “ஏற்புடையதல்ல” எனக் குறிப்பிடவும். தனிவேறான தகவல் தாள்கள் இணைக்கப்பட்டுள்ளவிடத்து படிவத்தில் சுட்டிக் காட்டவும்.

(3) ஏற்புடையற்பாலனவான வரிகளுடன் இருபத்தையாயிரம் ரூபாவான பதிவுக்கட்டணம் “இலங்கைக் காப்புறுதிச் சபையின்” சார்பில் வரையப்பட்ட கணக்கு வைத்திருப்பவருக்குச் செலுத்தப்பட வேண்டிய காசோலை மூலம்/வங்கி வரைவு மூலம் செலுத்தப் படுதல் வேண்டும்.

(4) விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்ட ஆவணங்களின் பிரதிகள், மூலப்பிரதிகளின் உண்மைப் பிரதிகளாகவுள்ளனவெனச் சத்திய பிரமாண ஆணையாளர் ஒருவரினால் அல்லது சமாதான நீதவான் ஒருவரினால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(5) பதிவுக்கான விண்ணப்பமொன்று, அது எல்லா அம்சங்களிலும் பூரணமாக இருந்தால் மட்டுமே கவனத்துட் கொள்ளப்படும்.

(6) இவ்விண்ணப்பத்தின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட தகவல்களையும் ஆவணங்களையும் அல்லது இ.கா.சபையினால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் தகவலை அல்லது ஆவணத்தைச் சமர்ப்பிக்கத் தவறுதல் விண்ணப்பத்தைச் செய்முறைப்படுத்துவதனைத் தாமதிக்கலாம்.

(7) விண்ணப்பமானது பதிவுக்குமுன்னர் விண்ணப்பகாரரினால் மீளப்பெறப்பட்டால், செலுத்தப்பட்ட கட்டணத்தின் (வரிகள் நீங்கலாக) ஐம்பது சதவீதம் மட்டுமே மீளளிக்கப்படும்.

(8) இ.கா.சபைக்குப் போலியான அல்லது பிழைவழியுய்க்கும் தகவல்களைச் சமர்ப்பித்தல், 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித்தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டத்தின்கீழான தவறொன்றாகும்.

## அட்டவணை II

ஒரு நட்டம் சீராக்குநராகப் பதிவுசெய்யப்படுவதற்கான விணணப்பம்
(ஒரு கம்பெனிக்காக)

(2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித்தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பம்)

| | |
|---|---|
| குறிப்பீட்டு இல. | |
| பதிவுக்கட்டணம்<br>முதலாம் ஆண்டு<br>வருடாந்தக் கொடுப்பனவு | <br>ரூபா<br>ரூபா |

பணிப்பாளர் தலைமையதிபதிக்கு,
இலங்கைக் காப்புறுதிச் சபை,
மட்டம் 11, கிழக்குக் கோபுரம்,
உலக வியாபார நிலையம்,
கொழும்பு 01.

(விண்ணப்பகாரக் கம்பெனியின் பணிப்பாளர், செயலாளர் அல்லது வேறு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலராகவுள்ள)
கீழே கையொப்பமிட்டுள்ள ................................... என்பவர் 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித்தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டத்தின் 89இ (1) ஆம் பிரிவின்கீழ் ஒரு நட்டம் சீராக்குநராகப் பதிவு செய்யப்படுவதற்காக விண்ணப்பகாரக் கம்பெனியின் சார்பில் விண்ணப்பிக்கின்றார் என்பதுடன், இலங்கைக் காப்புறுதிச் சபையின் (இகாச) மதிப்பீட்டுக்காக இயைபான ஆதாரப்படுத்துகின்ற ஆவணங்களுடன் பின்வரும் தகவல்களையும் கொடுத்துதவுகின்றார்:

1. விண்ணப்பகாரக் கம்பெனியின் பெயர் : .......................................................................................................

2. விண்ணப்பகாரக் கம்பெனி, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளதா ?
.....................................................................................................
(கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதியினால் சான்றுப்படுத்தப்பட்ட கூட்டிணைப்புச் சான்றிதழினதும் அமைப்பகவிதிகளினதும் பிரதியொன்றை இணைக்கவும்.)

3. பதிவுசெய்யப்பட்ட முகவரி : .......................................................................................................
   (i) தொலைபேசி : .......................................................................................................
   (ii) தொலைநகல் : .......................................................................................................
   (iii) மின்னஞ்சல் : .......................................................................................................

4. பிரதான தொழிலிடம் (பதிவு செய்யப்பட்ட முகவரியிலிருந்து வித்தியாசப்படின்) :
   (i) முகவரி : .......................................................................................................
   (ii) தொலைபேசி : .......................................................................................................
   (iii) தொலைநகல் : .......................................................................................................
   (iv) மின்னஞ்சல் : .......................................................................................................

5. எல்லாப் பணிப்பாளர்களினதும் பெயர்கள் :
(கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதியினால் சான்றுப்படுத்தப்பட்ட விண்ணப்பகாரக் கம்பெனியின் மிக அண்மையிலான படிவம் 20 இன் பிரதியொன்றையும், 3 ஆம் விதியின் தேவைப்பாடுகளுக்குப் பணிப்பாளர் இணங்கியொழுகுகின்றாரென உறுதிப்படுத்தியும் வெளிப்படுத்தியும் ஒவ்வொரு பணிப்பாளரிடமிருந்தான சத்தியக்கடதாசிகளையும் இணைக்கவும்.)

6. சிரேட்ட முகாமையாளர்களினதும் அலுவலர்களினதும் பெயர்களும் பதவிகளும் : ...........................................................

7. பங்குதாரர்களின் பெயர்களும் தற்போதைய பங்கு வைத்திருக்கையும் : .................................................................
(கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதியினால் சான்றுப்படுத்தப்பட்ட விண்ணப்பகாரக் கம்பெனியின் மிக அண்மையிலான படிவம் 06 இன் பிரதியொன்றை இணைக்கவும்.)

8. செலுத்தப்பட்ட பங்கு (கூறப்பட்ட ) மூலதனம் : .......................................................................................................

9. விண்ணப்பக்காரக் கம்பனியின் சிரேட்ட முகாமையாளர்கள், அலுவலர்கள் மற்றும் வேறு முக்கிய ஆளணியினரின் கல்விசார் மற்றும் உயர்தொழிற்சார் தகைமைகளும் அனுபவமும்: ...................................................................................

10. விண்ணப்பக்காரக் கம்பனியினால் தொழிலுக்கமர்த்தப்பட்டிருக்கையில், அல்லது அதன் பணிப்பின் கீழ் பணி புரிகையில் காப்புறுதி உரிமைக்கோரிக்கைகளின் கீழ் நட்டங்களை நுண்ணாய்வு செய்து மதிப்பிடுகின்ற பணிப்பாளர்களினதும் எல்லாத் தனியாட்களினதும் பெயர்கள் : ...........................................................

(இத்தனியாட்கள், விதிகள் 2(அ) முதல் (ஈ) வரையிலான மற்றும் (எ) இன் தேவைப்பாடுகளை ஈடுசெய்தல் வேண்டும் – கீழே குறிப்பு 4 ஐப் பார்க்கவும்.)

11. விண்ணப்பகாரக் கம்பனியின் பணிப்பாளர், அலுவலர் அல்லது வேறு முக்கிய தனியாள், இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கு முன்னரான மூன்றாண்டுக் காலப்பகுதியின் போது, இ. கா. சபையின் சபையுறுப்பினராக அல்லது ஊழியராகச் சேவையாற்றியுள்ளீரா? ............................................

12. *விண்ணப்பகாரக் கம்பெனியின் பணிப்பாளர், அலுவலர் அல்லது வேறு முக்கிய தனியாள் ஒரு குற்றச்செயலுக்காக, இலங்கையிலுள்ள அல்லது வேறு ஏதேனும் நாட்டின் ஏதேனும் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தினால் குற்றத்திர்ப்பளிக்கப்பட்டுள்ளாரா?
.......................................................................................................................

13. *விண்ணப்பகாரக் கம்பெனியின் பணிப்பாளர், அலுவலர் அல்லது வேறு முக்கிய தனியாள் அல்லது விண்ணப்பகாரக் கம்பெனி, இலங்கையின் அல்லது வேறேதேனும் நாட்டின் ஏதேனும சட்டத்தின்கீழ் பொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்றவராக

* ஆம் எனில், முழுவிபரங்களையும் வழங்குவதுடன், விண்ணப்பகாரர் தகுதியானவருமான ஆளொருவரென இகாச எவ்வாறாயினும் ஏன் முடிபுசெய்யவேண்டுமென்பதையும் விளக்கவும் (இப்படிவத்துடன் இணைக்கப்பட்ட தனிவேறான தாளில்).

அல்லது வங்கிமுறிந்தவராக வெளிப்படுத்தப்பட்டுள்ளாரா ? அல்லது கடனிறுக்க வகையற்றதாக அல்லது வங்கிமுறிந்தவராக வெளிப்படுத்தப்பட்டுள்ளதா? ...........................................................

14. *ஒரு தனிசை மீளக்கொடுப்பனவு செய்தல் அல்லது குடியியல் சேதவீடுகளைக் கொடுப்பனவு செய்தல் தொடர்பாக, விண்ணப்ப காரக் கம்பனியின் பணிப்பாளர், அலுவலர் அல்லது வேறு முக்கிய தனியாள், அல்லது விண்ணப்பகாரக் கம்பனி இலங்கையின் அல்லது வேறேதேனும் நாட்டின் ஏதேனும் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் தீர்ப்பை அல்லது கட்டளையைத் திருப்திப்படுத்துவதற்குத் தவறியுள்ளாரா? தவறியுள்ளதா? ...........................................................

15. *விண்ணப்பக்காரக் கம்பெனியின் பணிப்பாளர், அலுவலர் அல்லது வேறு முக்கிய தனியாள், இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே, ஏதேனும் காப்புறுதிக் கம்பெனியில், தரகரில், காப்புறுதி முகவரில், வங்கியில், நிதிநிறுவனத்தில் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவில் பணிப்பாளராக, பிரதான நிறைவேற்று அலுவலராக, அல்லது அதிகாரங்கொண்ட வேறேதேனும் பதவியில் சேவையாற்றுவதிலிருந்து ஓர் ஒழுங்குபடுத்தும் அல்லது வேறு அதிகாரசபையினால் அல்லது தகுதவாய்ந்த நீதிமன்றமொன்றினால் அகற்றப்பட்டுள்ளாரா அல்லது இடைநிறுத்தப்பட்டுள்ளாரா? .............................................

16. (i) *தொழில் கொண்டுநடாத்துவதற்கு வழங்கப்பட்ட அதன் உரிமம் அல்லது வேறு அதிகாரம் இடைநிறுத்தப்பட்டுள்ள அல்லது இல்லாதாக்கப்பட்டுள்ள; அல்லது

(ii) இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே ஒடுக்கப்பட்டுள்ள அல்லது ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற அல்லது கட்டாயமாக ஒழித்துக்கட்டப்பட்டுள்ள அல்லது நிருவாகியொருவருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள

ஏதேனும் காப்புறுதிக் கம்பெனியில், தரகரில், காப்புறுதி முகவரில், வங்கியில், நிதிநிறுவனத்தில் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவில் விண்ணப்பக்காரக் கம்பனியின் பணிப்பாளர், அலுவலர் அல்லது வேறு முக்கிய தனியாள், பணிப்பாளராக, பிரதான நிறைவேற்று அலுவலராக இருந்துள்ளாரா அல்லது வேறேதேனும் அதிகாரங்கொண்ட பதவியை வகித்துள்ளாரா?
.................................................................................................................................................

17. இப்படிவத்துடன் இணைக்கப்பட்ட தனிவேறான தாளில், விண்ணப்பகாரக் கம்பெனி தகுதியானதும் தகுந்ததுமாவென்பதை மதிப்பிடுவதற்கென இகாச நியாயமானமுறையில் அறிந்திருக்கவேண்டிய வேறெவையேனும் தகவல்களை வழங்கவும்.

18. குறைந்தபட்சம் பத்து மில்லியன் ரூபாவான காப்புறுதிப்பத்திர வரையறையுடன் உயர்தொழிற்சார் பொறுப்புக் காப்புறுதியை நீர் சமர்ப்பித்துள்ளீரா? இல்லையெனில், இப்படிவத்துடன் இணைக்கப்பட்ட தனிவேறான தாளில் விளக்கமொன்றைத் தரவும். (பதிவுத்தேதியன்றும் அத்தேதியிலிருந்தும் பயனுறவேண்டிய உயர்தொழிற்சார் பொறுப்புக் காப்புறுதிப்பத்திரங்களின் பிரதிகளை இணைக்கவும்.)

19. விண்ணப்பகாரக் கம்பெனி ஒரு காப்புறுதியாளரின் கொளிக்கம்பெனியா அல்லது துணைநிலைக்கம்பெனியா அல்லது இணைக்கம்பெனியா அல்லது காப்புறுதி முகவரா அல்லது தரகரா? ...................................................................

20. பங்குதாரர், விண்ணப்பகாரக் கம்பெனியின் ஒரு சிரேட்ட முகாமையாளரா, அலுவலரா அல்லது பணிப்பாளரா, ஒரு காப்புறுதியாளரின் பணிப்பாளரா, சிரேட்ட முகாமையாளரா, அலுவலரா, பங்குதாரரா, ஊழியரா அல்லது காப்புறுதி முகவரா அல்லது தரகரா? .......................................................................................................................

21. சான்றுப்படுத்துகை :

எமது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை மேலே தரப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட தகவல்களும் ஆவணங்களும் பூரணமானவை, உண்மையானவை மற்றும் பிழை வழியுய்ப்பனவல்ல என வெளிப்படுத்தி உறுதிப்படுத்துகின்றோம்.

பணிப்பாளரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுநரின் பெயர் (பதவியைக் குறித்துரைக்கவும்) : .........................
.................................................................................................................................................

..............................................................................
பணிப்பாளரின் /அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுநரின் கையொப்பம்

திகதி : ..........................................................

* ஆம் எனில், முழுவிபரங்களையும் வழங்குவதுடன், விண்ணப்பகாரர் தகுதியானவருமான ஆளொருவரென இகாச எவ்வாறாயினும் ஏன் முடிபுசெய்யவேண்டுமென்பதையும் விளக்கவும் (இப்படிவக்குடன் இணைக்கப்பட்ட தனிவேறான தாளில்).

கம்பெனிச் செயலாளரின் பெயர் : ..........................................................................................

..........................................................................................
கம்பெனிச் செயலாளரின் கையொப்பம்

திகதி : ............................................................

படிவத்தை நிரப்புவதற்கான அறிவுறுத்தல்கள் :

(1) இவ்விண்ணப்பப்படிவம் நிரப்பப்படுமுன்னர், காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளும் ................... ஆந் தேதிய .......................... ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நட்டம் சீராக்குநர் பதிவு விதிகளும் விளங்கிக்கொள்ளப்பட்டுக் கவனமாக ஆராயப்படுவது முக்கியமானதாகும்.

(2) விண்ணப்பகாரர்கள், தோதான எல்லா ஆதாரப்படுத்துகின்ற ஆவணங்களுடனும் சேர்த்து முறையாக நிரப்பப்பட்ட விண்ணப்ப்டிவமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். பதியப்படவேண்டிய விடயங்களெவையும் இல்லையாயின், "ஏற்புடையதல்ல" எனக் குறிப்பிடவும், தனிவேறான தகவல் தாள்கள் இணைக்கப்பட்டுள்ளவிடத்து படிவத்தில் குறித்துக்காட்டவும்.

(3) விண்ணப்பகாரக் கம்பெனி, நட்டம் சீராக்குநர் பதிவு விதிகளின் 3 ஆம் விதியுடன் இணங்கியோழுகுகின்றதென உறுதிப்படுத்துகின்றவையும் விண்ணப்பகாரக் கம்பெனியின் ஒவ்வொரு பணிப்பாளரிடமிருந்தும் பெறப்பட்டவையுமான சத்தியக்கடுதாசிகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(4) விண்ணப்பகாரக் கம்பெனியினால் தொழிலுக்கமர்த்தப்பட்டிருக்கையில் அல்லது பணிப்பின்கீழ் பணியாற்றுகையில் காப்புறுதி நட்டங்களை நுண்ணாய்வு செய்து மதிப்பிடுகின்ற ஒவ்வொரு தனியாளும், ஒரு நட்டம் சீராக்குநராக (தனியாட்களுக்காக) பதிவுசெய்யப்படுவதற்காக விண்ணப்பப்படிவத்தின் 7 ஆம் விடயத்தில் தவிர அதனை நிரப்பிச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(5) எழுபத்தையாயிரம் ரூபாவான பதிவுக்கட்டணம் (ஏற்புடையற்பாலனவான வரிகளுடன்) "இலங்கைக் காப்புறுதிச் சபையின்" சார்பில் வரையப்பட்ட கணக்குவைத்திருப்பவதுக்குச் செலுத்தவேண்டிய காசோலைமூலம்/ வங்கி வரைவு மூலம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(6) விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்ட ஆவணங்களின் பிரதிகள், மூலப்பிரதிகளின் உண்மைப் பிரதிகளாகவுள்ளனவெனச் சத்திய பிரமான ஆணையாளர் ஒருவரினால் அல்லது சமாதான நீதவான் ஒருவரினால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(7) பதிவுக்கான விண்ணப்பமொன்று, முறையாக நிரப்பப்பட்டாலொழிய கவனத்துட்கொள்ளப்படமாட்டாது.

(8) இவ்விண்ணப்பத்தின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட தகவல்களையும் ஆவணங்களையும் அல்லது இகாசபையினால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் தகவலை அல்லது ஆவணத்தைச் சமர்ப்பிக்கத்தவறுதல் விண்ணப்பத்தைச் செய்முறைப்படுத்துவதனைத் தாமதிக்கலாம்.

(9) விண்ணப்பமானது பதிவுக்குமுன்னர் விண்ணப்பகாரரினால் மீளப்பெறப்பட்டால், விண்ணப்பகாரக் கம்பெனியினால் செலுத்தப்பட்ட கட்டணத்தின் (வரிகள் நீங்கலாக) ஐம்பது சதவீதம் மட்டுமே மீளளிக்கப்படும்.

(10) இகாசபைத்துப் போலியான அல்லது பிழைவழியுய்க்கும் தகவல்களைச் சமர்ப்பித்தல், 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித்தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டத்தின்கீழான தவறொன்றாகும்.

7 - 640

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.